# ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் 2012

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 சனவரி 01 ஆந் திகதியில் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்து முடிக்கப்பட்டிருந்த ரூபா 26,393,112 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் 2012 ஆம் ஆண்டிலும் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளிற்காக வினைத்திறனாக பயன்படுத்தப்பட்டிருந்தது. இச்சொத்துக்கள் இ.க.நி இல. 16 அன் படி மீள விலைமதிக்கப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இ.க.நி இல. 19 இன் படி ஊழியர் பணிக்கொடைக்காக செய்யப்பட்ட நிதியேற்பாடு பெறுமதி முதலீடு செய்யப்பட வேண்டுமாயினும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 45,375,255 பணிக்கொடை ஏற்பாட்டை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) குறைத்துக் காட்டல்களும் அதிகரித்தும் காட்டல்களும்

2010 ஆம் ஆண்டு முதல் இலங்கை தரைப் படைக்கு மீளளிக்கப்பட வேண்டிய ரூபா 150,547,914 தொகையான கெடட் உத்தியோகத்தர்களின் சம்பளம் நிதி நிலைமைக்கூற்றில் அட்டுறுச் செலவினமாகக் காண்பிக்கப்பட்டிராமையால் ஆண்டின் செலவினமும் பொறுப்புக்களும் அத்தொகையால் குறதைத்துக் காட்டப்பட்டிருந்தன. இலங்கை தரைப்படையால் இத்தொகையை பதிவழிப்பதற்கு இணங்கப்பட்டுள்ளதாக உபவேந்தர் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்.

#### (ஆ) பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள்

வங்கிக் கடன் கணக்கு மீதியான ரூபா 47,802,500 பெறுமதியில் 2013 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட வேண்டிய வங்கிக் கடனின் அளவினை நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பித்து எஞ்சிய தொகையை நடைமுறையல்லாப் பொறுப்பாக காண்பிக்க வேண்டிய போதிலும், பல்கலைக்கழகம் மேற்படி கடன் கணக்கின் மொத்த மீதியினையும் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்பாக காண்பித்திருந்தது.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

2011 ஆம் ஆண்டு முதல் முடிவுறா வேலைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த பின்வரும் விபரங்கள் கொண்ட நிர்மாணங்களின் பெறுமதிகள் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் கூட மாற்றமின்றிக் காணப்பட்டன.

| கணக்குகளின் மீதி | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் மீதிகள் |
|---|---|
| | ரூபா |
| கட்டிடங்கள் | 6,388,934 |
| விவாகமானோர் உத்தியோகபூர்வ இல்லங்கள் | 230,870 |
| விவாகமானோர் உத்தியோகபூர்வ இல்லங்களின் நிர்மாணம் | 5,033,574 |

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

கணக்காய்வில் பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| 2006 கொள்வனவு வழிகாட்டல்கள் கையேடு | |
| (i) 2.14.1, 3.4.1 மற்றும் 4.3 ஆம் வழிகாட்டல்கள் | திணைக்களக் கொள்வனவுச் சபைக்கான அதிகார எல்லை ரூபா 3 மில்லியனான போதிலும், இவ்வெல்லையை மீறி கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அக் கொள்வனவுச் சபையால் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரர்களிற்கு கொடுப்பனவுகள் செய்யப் பட்டிருந்த போதிலும், அதற்காக கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.<br>➢ மருத்துவ பீட கட்டிடத்திற்காக ரூபா 9.1 மில்லியன் பெறுமதியான தீ அணைப்பு முறைமையொன்றை வழங்கிப் பொருத்து வற்காக ரூபா 4,596,547 இனை செலவிடுதல்.<br>➢ மருத்துவ பீட கட்டிடத்திற்காக ரூபா 7.1 மில்லியன் பெறுமதியான மின்சார பாரந்தூக்கியினை வழங்கிப் பொருத்து வற்கு மற்றும் அதற்காக ரூபா 3,584,000 இனை செலவிடுதல்.<br>➢ மருத்துவ பீட கட்டிடத்திற்காக ரூபா 4.7 மில்லியன் பெறுமதியான தரைவிரிப்புகளை வழங்குதல் மற்றும் அதற்காக ரூபா |

742,834 இனை செலவிடுதல்.

- ஊழியர் ஊக்குவிப்புக்காக ரூபா 12.4 மில்லியன் உலர் உணவுகளை கொள்வனவு செய்தல்.

(ii) 5.4.4 (i) ஆம் வழிகாட்டல்

கொள்வனவு முற்பணங்களை வழங்குகையில் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க முற்பணக் கொடுப்பனவு பிணையொன்றை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அவ்வாறு பிணைப் பாதுகாப்பொன்றைப் பெற்றுக் கொள்ளாது 08 சந்தர்ப்பங்களில் முற்பணமாக ஒப்பந்தகாரர்களுக்கு ரூபா 20,437,428 செலுத்தப்பட்டிருந்தது. அத்தொகை ஒவ்வொரு கொள்வனவுப் பெறுமதியிலும் 50 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) 8.9.1 (ஆ) ஆம் வழிகாட்டல்

ரூபா 500,000 இற்கு மேற்பட்ட பெறுமதிகொண்ட பொருட்கள் சேவைகளின் கொள்வனவின் போது ஆறு நிறுவனங்கள் தொடர்பில் ரூபா 28,813,494 கூட்டுத்தொகையான பெறுமதிகொண்ட பொருட்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்கையில் குறித்த தரப்பினர்களுடன் கைச்சாத்திடப்பட்ட எழுத்துமூல உடன்படிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சேர் ஜோன் கொத்தலாவ பாதுகாப்புக் கல்லூரியினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 36,566,608 தொகையான மிகையை நேரொத்த முன்னைய ஆண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 20,889,023 மிகையுடன் ஒப்பிடப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 15,677,585 அதிகரிப்பு காண்பிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் முன்னேற்றம் ஏற்பட்டதற்கு மீளாய்வாண்டில் வருமானம் அதிகரித்தமையாகும் என்பது அவதானிக்கப்பட்டது.

**2.2 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூன்று வெளிவாரி நபர்களால் பல்கலைக்கழகத்தின் ஆதனங்களில் உரித்துக் கோரி பல்கலைக்கழகத்திற்கு எதிராக நீதிமன்றங்களில் மூன்று வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

(ஆ) பல்கலைக்கழகத்தினால் மாணவர் உரித்து இரத்துச்செய்யப்பட்ட கெடட் உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்கையில் அறவிடப்பட வேண்டிய பிணைமுறியினை அறவிட்டுக்கொள்வதற்காக எட்டு நபர்களிற்கு எதிராக ரூபா 3,050,000 மொத்தமான இழப்பீடு கோரி நீதிமன்றங்களில் எட்டு வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் கீழ் 2012 ஆம் ஆண்டில் அமுலாக்குவதாக கூட்டிணைந்த திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருந்த பின்வரும் செயற்பாடுகளை மீளாய்வாண்டில் நிறைவேற்றிக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) பட்டப்பின்படிப்பு நிறுவகத்திற்காக தனியான கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணித்தல்

(ஆ) பொறியியல் பீடத்திற்காக ஆறு மாடி ஆய்வுகூடமொன்றை நிர்மாணித்தல்

**3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மை**

பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்கையில் தேவையான பொருட்கள் சேவைகளை விரைவாகவும் வினைத்திறனாகவும் பெற்றுக்கொள்வதற்காக சுற்றறிக்கை ஏற்பாடுகளை மீறி கொள்வனவு செய்வதற்காக 100 சதவீத முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த முற்பணங்கள் தொடர்பான பொருட்கள் 2013 செப்தெம்பர் மாதம் வரை வழங்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அத்தொகையினை மீள அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அவ்வழங்குனர்களிற்கு மீண்டும் முற்பணத்

தொகைகள் வழங்கப்பட்டிருந்தன. 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் மேற்குறிப்பிட்டவாறு வழங்கப்பட்டிருந்த முற்பணங்களில் முறையே ரூபா 37,300 மற்றும் ரூபா 5,045,201 இதுவரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்வதற்காக முற்பணங்களாக வழங்குனர்களிற்கு வழங்கப்பட்டிருந்த முறையே ரூபா 8,347,144 மற்றும் ரூபா 40,918,417 தொகைகள் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 ஒப்பந்த நிர்வாகக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மருத்துவ பீடத்தின் 03 ஆம் இலக்க கட்டிடத்தில் பொருத்தப்பட்டிருந்த பின்வரும் விடயங்கள் கட்டிடம் பயன்படுத்தப்பட்டதிலிருந்து ஒரு ஆண்டிற்கு முன்னரே துருப்பிடித்திருந்தன.

| | | |
|---|---|---|
| (i) | Fire Doors | 20 |
| (ii) | சுத்திகரிப்பு உபகரணங்கள் | 04 |

(ஆ) மேற்படி கட்டிடத்திலுள்ள ஏறும்படிகளின் கைப்பிடிகள் மற்றும் வெளிப் பாதுகாப்பு வேலிகள் இரும்பினைப் பயன்படுத்தி கல்வனைஸ் பூசப்பட்டு முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் பரிசோதனைச் சந்தர்ப்பத்தில் துருப்பிடித்திருந்தன.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது கல்லூரியின் உப வேந்தருக்கு தெரிவிக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) முற்பணங்கள் கட்டுப்பாடு

(ஈ) சொத்துக்கள் கட்டுப்பாடு

(உ) நிர்மாணங்கள் கட்டுப்பாடு